www.StudyGuideIndia.com

**5078**

Register Number | | | | | | |

**Part III**

# கணக்குப்பதிவியல் / ACCOUNTANCY

( Tamil Version )

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 200

## பகுதி - அ

( மதிப்பெண்கள் : 30 × 1 = 30 )

*குறிப்பு :* எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

I. கோடிட்ட இடங்களை நிரப்புக :

1. முன்கூட்டிச் செலுத்திய செலவுகள் இருப்பு நிலைக்குறிப்பின் ...................... பக்கத்தில் தோன்றும்.

2. முதல் மீது வட்டி ...................... கணக்கில் பற்று வைக்கப்படும்.

3. 31. 03. 07 அன்றைய இருப்பாய்வின்படி முதல் ரூ. 7,00,000 ஆகும், மற்றும் எடுப்பு ரூ. 60,000 ஆகும். ஆண்டுக்கு 5% வீதம் எடுப்பு மீதான வட்டி ...................... ஆகும்.

4. ஒரு தொழில் நிறுவனத்தின் சொத்துக்கள் ரூ. 1,00,000; முதல் ரூ. 75,000; அந்நிறுவனத்தின் பொறுப்புகள் ரூ. ...................... ஆகும்.

5. ...................... முறையில், ஆள் சார் மற்றும் ரொக்கக் கணக்குகள் மட்டுமே பராமரிக்கப்படுகின்றன.

6. விடுகருவிகள் போன்ற சொத்துக்கள் மீது தேய்மானம் நீக்குவதற்கு ஏற்ற முறை ...................... முறையாகும்.

[ Turn over

7. இயந்திரம் ஒன்றின் விற்பனை விலை ரூ. 2,00,000, அதை விற்றதில் ஏற்பட்ட இலாபம் ரூ. 35,000 எனில் அதன் ஏட்டு மதிப்பு ரூ. ...................... ஆகும்.

8. நீர்மைப் பொறுப்புகள் என்பது நடப்பு பொறுப்புகளிலிருந்து ...................... யை கழித்த தொகையாகும்.

9. விற்பனை ரூ. 3,00,000; விற்ற பொருளின் அடக்கவிலை ரூ. 2,55,000; எனில் மொத்த இலாபம் ரூ. ...................... ஆகும்.

10. ...................... ஒரு பயனுள்ள கருவியாக ரொக்கத் திட்டப்பட்டியல் உள்ளது.

11. நடப்புக் கணக்கின் பற்று இருப்பு இருப்பு நிலைக் குறிப்பின் ...................... பக்கத்தில் இடம் பெறும்.

12. பகிர்ந்து தரா இலாபம் இருப்பு நிலைக்குறிப்பின் ...................... பக்கத்தில் தோன்றும்.

13. புதிய இலாப விகிதத்திலிருந்து, பழைய இலாப விகிதத்தைக் கழித்தால் கிடைப்பது ...................... விகிதம்.

14. ஒறுப்பிழப்பு செய்த பங்குகளின் மறு வெளியீட்டு விலை முக மதிப்பைவிட ...................... இருக்க வேண்டும்.

15. ஒரு வரையறு நிறுமம் பங்கொன்றுக்கு ரூ. 100 வீதம் 30,000 பங்குகளை பொதுமக்களுக்கு வெளியிட்டது. அவற்றில் 25,000 பங்குகளை மட்டுமே பொதுமக்கள் வாங்க ஒப்புக் கொண்டால் அந்நிறுமத்தின் ஒப்பிய முதல் ரூ. ...................... ஆகும்.

www.StudyGuideIndia.com

II. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக :

16. முதல் மீதான வட்டி கூட்டப்படுவது

அ) செலவுடன்

ஆ) வருவாயுடன்

இ) முதலுடன்.

17. 31·03·2007 அன்றைய இருப்பாய்வின்படி பற்பல கடனாளிகள் ரூ. 40,000 ஆகும். வாராக் கடன் ரூ. 1000 போக்கெழுதப்பட வேண்டும். மேலும் 5% வாரா ஐயக்கடன் ஒதுக்கிற்கு ஒதுக்கப்பட வேண்டிய தொகை ரூ. ........................ ஆகும்.

அ) ரூ. 3,950

ஆ) ரூ. 1,950

இ) ரூ. 2,950.

18. முழுமை பெறாத பதிவேடுகளைப் பயன்படுத்தும் நிறுவனம்

அ) சிறுவியாபாரிகள்

ஆ) நிறுமங்கள்

இ) அரசு.

[ Turn over

www.StudyGuideIndia.com

19. 01. 04. 2007 அன்று பற்பல கடனாளிகள் ரூ. 75,000; 31. 03. 2008 அன்று பற்பல கடனாளிகள் ரூ. 90,000; அவ்வாண்டில் பற்பல கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் ரூ. 1,50,000 எனில் அவ்வாண்டின் கடன் விற்பனை ரூ. ........................ ஆகும்.

அ) ரூ. 1,85,000

ஆ) ரூ. 1,65,000

இ) ரூ. 1,25,000.

20. நிலைச்சொத்து விற்பதால் ஏற்படும் நட்டம் வரவு செய்யப்படும் கணக்கு

அ) தேய்மானக் கணக்கு

ஆ) நிலைச்சொத்துக் கணக்கு

இ) இலாப நட்டக் கணக்கு.

21. ஒரு சொத்தின் அடக்க மதிப்பு ரூ. 2,00,000; ஆண்டுக்கு 10% வீதம் நேர்கோட்டு முறையில் தேய்மானம் நீக்கப்படுகிறது. மூன்றாம் ஆண்டு இறுதியில் அச்சொத்தின் ஏட்டு மதிப்பு ரூ. ........................ ஆகும்.

அ) ரூ. 1,40,000

ஆ) ரூ. 1,60,000

இ) ரூ. 1,80,000.

22. அனைத்து செயல்பாட்டு விகிதங்களும் ........................ ஆக கொடுக்கப்படும்.

அ) விகிதாச்சாரம்

ஆ) மடங்கு

இ) சதவீதம்.

www.StudyGuideIndia.com

23. மொத்த இலாப விகிதத்தில் உள்ள உறவு முறை

அ) மொத்த இலாபம் மற்றும் மொத்த விற்பனை

ஆ) மொத்த இலாபம் மற்றும் கடன் விற்பனை

இ) மொத்த இலாபம் மற்றும் ரொக்க விற்பனை.

24. திட்டப்பட்டியல் என்பது ........................ காலத்திற்கான மதிப்பீடு ஆகும்.

அ) எதிர்

ஆ) நடப்பு

இ) கடந்த.

25. முதல் மீது வட்டி கணக்கிடப்படுவது

அ) தொடக்க முதல்

ஆ) இறுதி முதல்

இ) சராசரி முதல்.

26. நிலை முதல் முறையில் கூட்டாளிகளுக்குக் கொடுக்கப்படும் ஊதியம் பதியப்படுவது

அ) நடப்புக் கணக்கில்

ஆ) முதல் கணக்கில்

இ) நடப்பு கணக்கு ( அ ) முதல் கணக்கு.

27. உயர் இலாபம் கணக்கிடப் பயன்படுத்தும் வாய்ப்பாடு

அ) சராசரி இலாபம் + சாதாரண இலாபம்

ஆ) சராசரி இலாபம் – சாதாரண இலாபம்

இ) சராசரி இலாபம் × சாதாரண இலாபம்.

[ Turn over

www.StudyGuideIndia.com

28. ஒரு நிறுமத்தின் பங்கு வெளியீட்டு விலை முகமதிப்பிற்கு அதிகமாக இருக்குமேயானால் அதனை ...................... என்று அழைக்கலாம்.

அ) முகமதிப்பில் வெளியிடுதல்

ஆ) முனைமத்தில் வெளியிடுதல்

இ) தள்ளுபடியில் வெளியிடுதல்.

29. பத்திர முனைமம் இருப்பு நிலைக் குறிப்பில் ...................... பக்கத்தில் தோன்றும்.

அ) சொத்துக்கள்

ஆ) பொறுப்புக்கள்

இ) சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்.

30. ஒரு நிறுமத்தின் இயக்குநர்கள் ஒன்று ரூ. 10 மதிப்புடைய 100 சாதாரண பங்குகள் மீதான இறுதி அழைப்புத் தொகை ரூ. 2 செலுத்தப்படாமைக்காக ஒறுப்பிழப்பு செய்து அவற்றை ரூ. 700 க்கு மறு வெளியீடு செய்யப்பட்டன எனில் முதலின காப்பிற்கு மாற்றப்படும் தொகை

அ) ரூ. 500

ஆ) ரூ. 200

இ) ரூ. 300.

www.StudyGuideIndia.com

## பகுதி - ஆ

( மதிப்பெண்கள் : 10 × 5 = 50 )

குறிப்புகள் : i) எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.

ii) கோட்பாடு சார்ந்த வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் 50 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

31. வாராக்கடன் என்றால் என்ன ?

32. ரொக்க திட்டப்பட்டியல் - குறிப்பு வரைக.

33. காப்பீட்டு முறையில் தேய்மானம் கணக்கிடுதல் பற்றி குறிப்பு வரைக.

34. முதல் விற்பனை விகிதம் பற்றி குறிப்பு வரைக.

35. ரொக்கப் பெறுதல்களுக்கு ஐந்து உதாரணம் தருக.

36. நிலைமுதல்முறை என்றால் என்ன ?

37. பங்கு ஒறுப்பிழப்பு என்றால் என்ன ?

38. எடுப்புகள் மீதான வட்டி ரூ. 3,000 குறித்த சரிகட்டுப் பதிவு மற்றும் மாற்றுப்பதிவு தருக.

39. விடுபட்ட தொகையை காண்க :

| | |
|---|---|
| இறுதிமுதல் | ரூ. 12,000 |
| அவ்வாண்டில் பெற்ற இலாபம் | ரூ. 5,500 |
| கூடுதல் முதல் | ரூ. 4,000 |
| எடுப்பு | ரூ. 2,500 |
| தொடக்க முதல் | ? |

[ Turn over

www.StudyGuideIndia.com

40. கீழ்காணும் விவரங்களைக் கொண்டு நேர்கோட்டு முறையில் தேய்மான விகிதம் கணக்கிடுக :

| | |
|---|---|
| இயந்திரத்தின் அடக்கவிலை | ரூ. 2,30,000 |
| நிறுவுவதற்கான செலவுகள் | ரூ. 20,000 |
| பயனளிப்புக் காலம் | 10 ஆண்டுகள் |
| இறுதி மதிப்பு | ரூ. 50,000 |

41. பின்வரும் விவரங்களைக் கொண்டு நிலைச் சொத்துக்கள் விற்பனை விகிதத்தைக் கணக்கிடுக :

| | ரூ. |
|---|---|
| விற்பனை | 6,00,000 |
| விற்பனை திருப்பம் | 2,00,000 |
| நிலைச் சொத்துக்கள் | 2,00,000 |

42. மோகன், முருகன் என்ற கூட்டாளிகள் சமமாக இலாப நட்டம் பகிர்ந்து வருகின்றனர். மோகன் ஆண்டு முழுவதும் ஒவ்வொரு மாத தொடக்கத்திலும் ரூ. 2,000 திரும்ப எடுத்துக் கொள்கிறார். முருகன் ஆண்டு முழுவதும் ஒவ்வொரு மாத இறுதியிலும் ரூ. 3,000 திரும்ப எடுத்துக் கொள்கிறார். ஆண்டுக்கு 10% வீதம் எடுப்புகள் மீதான வட்டியைக் கணக்கிடுக.

43. *A*, *B* என்ற கூட்டாளிகள் முறையே 3 : 2 என்ற விகிதத்தில் இலாப, நட்டத்தை பகிர்ந்து வந்தனர். அவர்கள் *C* என்ற நபரை கூட்டாண்மையில் $\frac{1}{5}$ பங்கிற்கு கூட்டு சேர்த்தனர். அவர் அந்தப் பங்கினை முழுமையாக *A*-யிடம் இருந்து பெற்றால், *A*, *B* மற்றும் *C*-யின் புதிய இலாப விகிதம் யாது ?

44. ஒரு வரையறு நிறுமம் பங்கொன்றுக்கு ரூ. 10 வீதம் 1,00,000 பங்குகளை விண்ணப்பத்தின் பொழுது ரூ. 2 செலுத்தும் வகையில் வெளியிட்டது. நிறுமம் 1,10,000 பங்குகள் வேண்டி விண்ணப்பம் பெற்றது. மிகையான விண்ணப்பங்கள் நிராகரிப்பட்டு தொகை திருப்பப்பட்டது. தேவையான குறிப்பேட்டுப் பதிவுகள் மட்டும் தருக.

www.StudyGuideIndia.com

## பகுதி - இ

( மதிப்பெண்கள் : 5 × 12 = 60 )

குறிப்புகள் : i) ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும். இவற்றுள் 45-வது வினாவிற்கு கட்டாயம் விடையளிக்க வேண்டும்.

ii) கோட்பாடு சார்ந்த வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் 150 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

45. அ) 31. 03. 2007 அன்றைய இருப்பாய்வின்படி பற்பல கடனாளிகள் ரூ. 52,000.

சரிக்கட்டுதல்கள் :

i) ரூ. 2,000 வாராக்கடன் போக்கெழுதுக.

ii) கடனாளிகள் மீது வாரா ஐயக்கடன் ஒதுக்கு 5% உருவாக்குக.

iii) கடனாளிகள் மீது 2% தள்ளுபடி ஒதுக்கு உருவாக்குக.

சரிக்கட்டுப் பதிவுகள் தந்து இவ்விவரங்கள் இறுதிக் கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டுக.

*அல்லது*

ஆ) திரு. சுரேஷ் அவர்கள் தனது ஏடுகளை முழுமைப் பெறா இரட்டைப் பதிவு முறையில் பராமரித்து வருகிறார். அவர் ரூ. 1,10,000 முதலுடன் 01. 04. 07 அன்று தொழில் தொடங்கினார். மற்றும் 31. 03. 08 அன்று அவரது நிலை கீழ்க்கண்டவாறு இருந்தது

| | ரூ. |
|---|---|
| வங்கி இருப்பு | 20,000 |
| சரக்கிருப்பு | 30,000 |
| பற்பல கடனாளிகள் | 70,000 |
| இயந்திரம் | 50,000 |
| கையிருப்பு ரொக்கம் | 10,000 |
| பெறுதற்குறிய மாற்றுச் சீட்டுகள் | 30,000 |
| பற்பல கடனீந்தோர் | 40,000 |
| செலுத்தற்குறிய மாற்றுச்சீட்டுகள் | 20,000 |
| கொடுபட வேண்டிய செலவுகள் | 5,000 |

அந்நிதியாண்டில் அவர் அளித்த கூடுதல் முதல் ரூ. 35,000 மாதம் ரூ. 2,000 வீதம் தனது சொந்த உபயோகத்திற்கு திரும்ப எடுத்துக் கொண்டார். 2007-08-ம் ஆண்டிற்கான அவருடைய இலாபம் அல்லது நட்டத்தைக் கண்டுபிடிக்க.

[ Turn over

www.StudyGuideIndia.com

46. தேய்மானம் வரைவிலக்கணம் தருக. தேய்மானம் நீக்க வேண்டியதன் தேவைகள் யாவை ?

47. திட்டப்பட்டியல் - இலக்கணம் தருக. திட்டப்பட்டியலின் தன்மைகள் யாவை ? ரொக்கத்திட்டப் பட்டியல் தயாரிக்கப் பயன்படுத்தும் முறைகள் யாவை ?

48. நற்பெயர் என்றால் என்ன ? நற்பெயரைப் பாதிக்கும் காரணிகளை விளக்குக.

49. ஜெயலெட்சுமி வரையறு நிறுமம் 2006 ஜூலை 1 அன்று ரூ. 5,00,000 மதிப்புள்ள இயந்திரம் ஒன்றை வாங்கியது. ஆண்டுக்கு 10% வீதம் நேர்கோட்டு முறையில் தேய்மானம் நீக்கப்பட்டது. அவ்வியந்திரம் பயனற்றுப் போனதால் 31. 03. 3009 அன்று ரூ. 3,80,000-க்கு விற்கப்பட்டது.

ஆண்டுதோறும் மார்ச் 31 அன்று கணக்குகள் முடிக்கப் பெறுகின்றன எனக் கொண்டு, இயந்திரக் கணக்கு மற்றும் தேய்மானக் கணக்கு ஆகியவற்றை மூன்று ஆண்டுகளுக்கு தயார் செய்க.

50. கீழ்க்காணும் விவரங்களைக் கொண்டு மொத்த இலாப விகிதம், சரக்கிருப்பு விற்பனை விகிதம், நிகர இலாப விகிதம் ஆகியவற்றைக் கணக்கிடுக.

| | ரூ. |
|---|---|
| விற்பனை | 3,00,000 |
| விற்ற பொருளின் அடக்க விலை | 2,10,000 |
| தொடக்க சரக்கிருப்பு | 80,000 |
| இறுதி சரக்கிருப்பு | 60,000 |
| நிகர இலாபம் | 60,000 |

www.StudyGuideIndia.com

51. சுஜா, பானு என்னும் இரு கூட்டாளிகள் முறையே 3 : 2 என்ற விகிதத்தில் இலாபம் பகிர்ந்து கொள்ள உடன்பட்டு கூட்டாண்மை நிறுவனம் அமைத்தனர். 2007 ஏப்ரல் 1 அன்று அவர்களுடைய முதல் முறையே ரூ. 2,00,000 மற்றும் ரூ. 1,50,000 ஆகும்.

சரிக்கட்டுகளுக்கு முன் அந்நிறுவனத்தின் 2008 மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டின் நிகர இலாபம் ரூ. 75,000; முதல் மீது வட்டி 6% அளிக்கப்படும். அவர்கள் இருவரும் பெறும் ஆண்டு ஊதியம் தலா ரூ.10,000 ஆகும். ஓர் அண்டிற்கு சுஜா பெறும் கழிவு ரூ. 1050, அந்த ஆண்டு சுஜா எடுத்தத் தொகை ரூ. 20,000; பானு எடுத்த தொகை ரூ. 15,000. எடுப்புகள் மீது வட்டி ஆண்டுக்கு 6% வீதம் சுஜா ரூ. 600. பானு ரூ. 450. 2008 மார்ச் 31 அன்று உள்ளபடி கூட்டாளிகளின் இலாப-நட்ட பகிர்வு கணக்கையும் முதல் கணக்குகளையும் தயாரிக்க.

52. குட்லக் வரையறு நிறுமத்தின் இயக்குநர்கள் ஒவ்வொன்றும் ரூ. 10 மதிப்புடைய 2,000 சாதாரணப் பங்குகள் மீது முதல் அழைப்புத் தொகை ரூ. 3 மற்றும் இறுதி அழைப்புத் தொகை ரூ. 2 யும் செலுத்தப்படாததால் அவற்றை ஒறுப்பிழப்பு செய்தனர்.

ஒறுப்பிழப்பு செய்யப்பட்ட பங்குகளில் 1000 பங்குகள் மட்டும் ரூ. 8 வீதம் முழுவதும் செலுத்தப்பட்ட பங்குகளாக மறு வெளியீடு செய்யப்பட்டன.

தேவையான குறிப்பேட்டுப் பதிவுகள் தந்து; பேரேட்டில் பங்கு ஒறுப்பிழப்பு கணக்கையும் முதலின காப்பு கணக்கையும் தயாரிக்க.

www.StudyGuideIndia.com

## பகுதி - ஈ

( மதிப்பெண்கள் : 3 × 20 = 60 )

*குறிப்பு :* எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்க. இவற்றுள் 53-வது வினாவிற்கு கட்டாயம் விடையளிக்க வேண்டும்.

53. அ) திரு. சாமி என்பவர் முழுமை பெறா இரட்டைப் பதிவு முறையில் தன் ஏடுகளை வைத்துள்ளார். கீழ்க்கண்ட விவரங்களிலிருந்து 31. 03. 2008 ஆம் நாளன்றைய வியாபார, இலாப நட்ட கணக்கும் அந்நாளைய இருப்புநிலைக் குறிப்பும் தயாரிக்க.

| | 01. 04. 2007 ரூ | 31. 03. 2008 ரூ |
|---|---|---|
| சரக்கிருப்பு | 75,000 | 37,500 |
| பற்பல கடனாளிகள் | 1,87,500 | 2,62,500 |
| ரொக்கம் | 18,750 | 30,000 |
| அறைகலன் | 7,500 | 7,500 |
| பற்பல கடனீந்தோர் | 1,12,500 | 1,31,250 |

*மற்ற விவரங்கள் :*

| | ரூ. |
|---|---|
| எடுப்பு | 30,000 |
| பெற்ற தள்ளுபடி | 11,250 |
| அளித்த தள்ளுபடி | 7,500 |
| பல்வகைச் செலவுகள் | 26,250 |
| கடனீந்தோருக்கு அளித்த ரொக்கம் | 3,37,500 |
| கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் | 4,01,250 |
| விற்பனை திருப்பம் | 11,250 |
| கொள்முதல் திருப்பம் | 3,750 |
| ரொக்க விற்பனை | 3,750 |

*அல்லது*

www.StudyGuideIndia.com

ஆ) ரவி, வெங்கட், குமார் என்ற கூட்டாளிகள் முறையே 3 : 2 : 1 எனும் விகிதத்தில் இலாப நட்டங்கள் பகிர்ந்து வந்தனர். 31. 03. 2008 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு :

| பொறுப்புகள் | | ரூ. | சொத்துக்கள் | ரூ. |
|---|---|---|---|---|
| பற்பல கடனீந்தோர் | | 90,000 | வங்கி இருப்பு ரொக்கம் | 1,41,000 |
| செலுத்தற்குரிய மாற்றுச் சீட்டு | | 30,000 | பற்பல கடனாளிகள் | 39,000 |
| பொதுக்காப்பு | | 90,000 | சரக்கிருப்பு | 90,000 |
| முதல் கணக்குகள் : | | | பொறியும் பொறித்தொகுதியும் | 1,20,000 |
| ரவி | 1,80,000 | | நிலம் கட்டிடம் | 2,10,000 |
| வெங்கட் | 1,20,000 | | | |
| குமார் | 90,000 | 3,90,000 | | |
| | | 6,00,000 | | 6,00,000 |

பின்வரும் பகர்வுகளுக்குப் பிறகு 01. 04. 2008 அன்று குமார் விலகினார்.

i) நற்பெயர் ரூ. 1,08,000 என மதிப்பிட்டுத் தோற்றுவிப்பது.

ii) நிலம் கட்டிடம் மதிப்பை ரூ. 30,000 மதிப்பேற்றம் செய்வது.

iii) பொறியும் பொறித்தொகுதியும் மீது ரூ. 9,000 தேய்மானம் நீக்குவது.

iv) கொடுபடா பழுது பார்ப்புச் செலவுக்கு ரூ. 12,000 ஒதுக்கீடு செய்யப்பட்டது.

v) குமாருக்கு சேர வேண்டிய தொகை உடனடியாக ஒரே தவணையில் செலுத்துவது.

மறுமதிப்பீட்டுக் கணக்கு, முதல் கணக்குகள் மற்றும் புதிய கூட்டாண்மையின் இருப்பு நிலைக் குறிப்பையும் தயாரிக்க.

[ Turn over

www.StudyGuideIndia.com

54. திரு. ஆறுமுகம் என்பவரது கீழ்க்கண்ட இருப்பாய்விலிருந்து 31. 03. 2008 ஆம் நாளோடு முடிவுறும் ஆண்டிற்கான வியாபார இலாப நட்ட கணக்கையும், அந்நாளைய இருப்பு நிலைக் குறிப்பையும் தயார் செய்க :

**2008, மார்ச் 31 ஆம் நாளைய இருப்பாய்வு**

| பற்று இருப்புகள் | ரூ. | வரவு இருப்புகள் | ரூ. |
|---|---|---|---|
| கையிருப்பு ரொக்கம் | 32,500 | முதல் | 1,00,000 |
| வங்கியில் ரொக்கம் | 8,500 | விற்பனை | 80,000 |
| எடுப்புகள் | 20,000 | பற்பல கடனீந்தோர் | 22,500 |
| கூலி | 5,000 | | |
| கொள்முதல் | 10,000 | | |
| சரக்கிருப்பு ( 1. 4. 2007 ) | 30,000 | | |
| கட்டிடம் | 50,000 | | |
| பற்பல கடனாளிகள் | 22,000 | | |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டுகள் | 14,500 | | |
| வாடகை | 2,250 | | |
| கழிவு | 1,250 | | |
| பொதுச்செலவுகள் | 4,000 | | |
| அறைகலன் | 2,500 | | |
| | 2,02,500 | | 2,02,500 |

*சரிகட்டுதல்கள் :*

i) இறுதி சரக்கிருப்பு ரூ. 20,000

ii) முதல் மீது வட்டி 6% அனுமதிக்க

iii) கட்டிடம் மீது தேய்மானம் ஆண்டுக்கு 10% அனுமதிக்க

iv) கொடுபட வேண்டிய கூலி ரூ. 500

v) முன் கூட்டிச் செலுத்திய வாடகை ரூ. 250.

www.StudyGuideIndia.com

55. பின்வரும் இருப்புநிலைக் குறிப்பிலிருந்து பின்வருனவற்றைக் கணக்கிடுக :

i) நடப்பு விகிதம்

ii) நீர்மை விகிதம்

iii) புற அகப்பொறுப்புகள் விகிதம்

iv) உரிமையாளர் விகிதம்.

**2007 மார்ச் 31 ம் நாளைய இருப்பு நிலைக் குறிப்பு**

| *பொறுப்புகள்* | *ரூ.* | *சொத்துக்கள்* | *ரூ.* |
|---|---|---|---|
| பங்குமுதல் | 1,40,000 | நிலைச் சொத்துக்கள் | 1,30,000 |
| காப்புகள் | 10,000 | சரக்கிருப்பு | 30,000 |
| கடன்கள் | 75,000 | பற்பல கடனாளிகள் | 60,000 |
| கடனீந்தோர் | 50,000 | பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 20,000 |
| வங்கி மேல் வரைப்பற்று | 10,000 | ரொக்கம் | 10,000 |
| | | நற்பெயர் | 35,000 |
| | 2,85,000 | | 2,85,000 |

56. கீழ்க்காணும் விவரங்களிலிருந்து 2008 மார்ச், ஏப்ரல், மே, மாதங்களுக்கான ரொக்கத் திட்டப்பட்டியல் தயாரிக்க :

| *மாதம்* | *கடன் விற்பனை (ரூ.)* | *கடன் கொள்முதல் (ரூ.)* | *அலுவலகச் செலவுகள் (ரூ.)* |
|---|---|---|---|
| 2008 சனவரி | 60,000 | 40,000 | 12,000 |
| " பிப்ரவரி | 70,000 | 30,000 | 10,000 |
| " மார்ச் | 80,000 | 35,000 | 9,000 |
| " ஏப்ரல் | 75,000 | 50,000 | 12,000 |
| " மே | 72,000 | 55,000 | 11,000 |

*கூடுதல் தகவல்கள் :*

i) 01. 03. 2008 அன்று தொடக்க கையிருப்பு ரொக்கம் ரூ. 15,000

ii) சரக்களித்தோர் அனுமதித்த கடனின் காலம் இரண்டு மாதங்கள்

iii) வாடிக்கையாளருக்கு அளித்த கடனின் காலம் ஒரு மாதம்

iv) அலுவலக செலவுகள் அந்தந்த மாதத்தில் செலுத்தப்பட வேண்டும்

v) ஏப்ரல் மாதம் செலுத்த வேண்டிய வட்டி ரூ. 3,500.



www.StudyGuideIndia.com

57. வசந்த் வரையறு நிறுமம் ஒன்று ரூ. 100 மதிப்புள்ள 20,000 பங்குகளை, பங்கொன்று ரூ. 120 வீதம் வெளியீடு செய்தது. தொகை கீழ்க்கண்டவாறு செலுத்தப்பட வேண்டும்.

| | |
|---|---|
| விண்ணப்பத்தின்போது | ரூ. 20 |
| ஒதுக்கீட்டின்போது | ரூ. 50 (முனைமம் ரூ. 20 உட்பட) |
| முதலாவது அழைப்பின் போது | ரூ. 30 |
| இறுதி அழைப்பின் போது | ரூ. 20 |

அனைத்து பங்குகளும் முழுமையாக ஒப்பப்பட்டன. இரு அழைப்புகளும் விடுக்கப்பட்டு தொகைகள் அனைத்தும் முழுமையாகப் பெறப்பட்டன.

குறிப்பேட்டுப் பதிவுகள் தருக. மேலும் வங்கிக் கணக்கு, பங்கு முதல் கணக்கு, பத்திர முனைமக் கணக்கு மற்றும் இருப்புநிலைக் குறிப்பு தயார் செய்க.

www.StudyGuideIndia.com